TAMIL

Court Network



# நீதிமன்றத்தில் உங்கள் நாள்

## A Guide

### Family Violence Intervention Orders in the Magistrates' Court

# உங்கள் பாதுகாப்பு குறித்து உங்களுக்கு உடனடிக் கவலைகள் இருந்தால் 000 ஐ அழைக்கவும்

**குடும்ப வன்முறை:** பயம் அல்லது பலம் கொண்டு ஒரு குடும்ப உறுப்பினரைக் கட்டுப்படுத்த, அச்சுறுத்த, பலவந்தப்படுத்த அல்லது ஆதிக்கம் செலுத்தப் பயன்படும் தீங்கான நடத்தை. நீங்கள் நினைப்பதை விட இது மிகவும் சிக்கலான வழிகளில் அமையலாம், முழுமையான வரைவிலக்கணம் மற்றும் எடுத்துக்காட்டுகளுக்கு www.vic.gov.au/what-family-violence ஐப் பார்க்கவும்.


**குடும்ப வன்முறை தலையீட்டு உத்தரவு (FVIO அல்லது IVO):** ஒருவர் அவரது குழந்தைகள் மற்றும் அவரது சொத்துக்களை குடும்ப உறுப்பினர், துணைவர் அல்லது முன்னாள் துணைவரிடமிருந்து பாதுகாப்பதற்கான நீதிமன்ற உத்தரவு.

**விண்ணப்பதாரர்:** நீதிமன்ற உத்தரவுக்கு விண்ணப்பிக்கும் நபர். பெரும்பாலும் காவல்துறையினரால் அல்லது குடும்ப வன்முறையால் பாதிக்கப்பட்டவர்/தப்பிப் பிழைத்தவர்.

**பாதுகாக்கப்பட்ட நபர்:** தலையீட்டு உத்தரவின் கீழ் பாதுகாக்கப்பட்ட நபர். இது விண்ணப்பதாரராகவும் அவர்களது குழந்தைகளாகவும் இருக்கலாம்.

**பதிலளிப்பவர் (பிரதிவாதி):** குடும்ப வன்முறையில் ஈடுபட்டதாக குற்றம் சாட்டப்பட்ட நபர்.

**விசாரணை:** நீதிமன்றத்தில் ஒரு வழக்கின் எடுத்துரைப்பு.



# குடும்ப வன்முறை தலையீட்டு உத்தரவுகள் (FVIO)

ஒரு FVIO என்பது சட்டப்பூர்வமாக நடைமுறைப்படுத்தக்கூடிய நீதிமன்ற உத்தரவு ஆகும். இது ஒரு நபர், அவர்களின் குழந்தைகள் மற்றும் அவர்களின் சொத்துக்களுக்கு பாதுகாப்பை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. நீதிமன்றத்தில் ஒரு நடுவரால் உத்தரவு மெற்கொள்ளப்படுகிறது.

பாதுகாக்கப்பட்ட நபருக்கு எதிராக குடும்ப வன்முறையைப் பயன்படுத்துவதைத் தடுப்பதற்கான நிபந்தனைகள் இந்த உத்தரவில் உள்ளன.

நிபந்தனைகளைப் பொறுத்து, பதிலளிப்பவர் பின்வருவனவற்றைக் கடைப்பிடிக்குமாறு FVIO கோரலாம்.

- குறிப்பிட்ட நடத்தையை நிறுத்துதல்
- பாதுகாக்கப்பட்ட நபருடன் தொடர்பு கொள்ளவோ அல்லது தகவல் தொடர்பை மேற்கொள்ளவோ, அல்லது அவர்களுக்காக வேறு எவரையாவது அவற்றை செய்யவைக்கவோ கூடாது
- பாதுகாக்கப்பட்ட நபரிடம் செல்லவோ அல்லது அருகில் இருக்கவோ அல்லது அவர்களுக்காக வேறு எவரையாவது அவற்றைச் செய்யவைக்கவோ கூடாது.

FVIO ஒரு குடியியல் (civil) விடயம். பதிலளிப்பவர் ஒரு நிபந்தனையை மீறினால், அதனைக் காவல்துறையினரிடம் புகாரளிக்கவும். நிபந்தனைகளை மீறுவது தண்டனைக்குரிய குற்றமாகும்.

# FVIO க்கு விண்ணப்பித்தல்

நீங்கள் குடும்ப வன்முறையால் பாதிக்கப்பட்டிருந்தால், இணையவழியில் FVIO க்கு விண்ணப்பிக்கலாம் அல்லது கூடுதல் தகவல்களை இந்த இணையத்தளத்தில் பெறலாம்: **www.mcv.vic.gov.au/interventio-orders**

சில சமயங்களில், காவல்துறை உங்கள் சார்பாக நீதிமன்றத்தில் விண்ணப்பம் செய்யலாம்.

# உங்கள் FVIO விசாரணைக்காக நீதிமன்றத்திற்கு வருகைதருதல்.

**உங்கள் சார்பாக FVIO க்கு காவல்துறையினர் விண்ணப்பித்தால், நீங்கள் நீதிமன்றத்துக்கு வருகைதர வேண்டுமா என்று அவர்களிடம் கேளுங்கள்.**

## பாதுகாப்புக் கவலைகள்

- உங்களுக்கு பாதுகாப்புக் கவலைகள் இருந்தால், உங்கள் விசாரணை தேதிக்கு முன் நீதிமன்றத்தை அழைக்கவும். பாதுகாப்பான நுழைவு மற்றும் காத்திருப்பு அறை போன்றவற்றை வழங்குவதன் மூலம் அவர்கள் உங்களுக்கு ஆதரவளிக்க முடியும்.

## உங்களுக்கு ஒரு மொழிபெயர்ப்பாளர் தேவைப்பட்டால்

- நீதிமன்றத்தில் உங்களுக்கு உதவியாக ஒரு மொழிபெயர்ப்பாளர் தேவைப்பட்டால், உங்கள் நீதிமன்ற தேதிக்குமுன் நீதிமன்றத்தை அழைக்கவும். நீங்கள் ஓர் இலவச மொழிபெயர்ப்பாளர் சேவைக்குத் தகுதியுடையவராக இருக்கலாம்.
- உங்களுக்கு ஒரு மொழிபெயர்ப்பாளர் தேவைப்பட்டால், நீங்கள் ஒருவரைப் பயன்படுத்துவது முக்கியமாகும் நீதிமன்றத்தில் என்ன நடக்கிறது என்பதைப் புரிந்துகொள்வது முக்கியம்.
- நீங்கள் மொழிபெயர்ப்பாளரை முன்பதிவு செய்திருந்தால், மொழிபெயர்ப்பாளர் இல்லாமல் உங்கள் நீதிமன்ற விசாரணை நடக்கக் கூடாது. ஒரு மொழிபெயர்ப்பாளர் முன்பதிவு செய்யப்பட்டுள்ளாரா என்பது குறித்து உங்களுக்குத் தெரியாவிட்டால், பதிவக உதவி மையத்துடன் சரிபார்க்கவும்.

## நீதிமன்ற விசாரணைக்கு நாள் முழுவதும் தேவைப்படலாம்

- நீங்கள் சில மணிநேரங்கள் அல்லது நாள் முழுவதும் நீதிமன்றத்தில் இருக்க வேண்டியிருக்கலாம். எனவே உங்கள் நீதிமன்ற நாளில் வேறு எவற்றுக்கும் எந்த நேர ஒதுக்கீடும் செய்ய வேண்டாம். உங்களுடன் குழந்தைகள் அல்லது நீங்கள் பராமரிக்கின்றவர்கள் இருந்தால், அவர்களை அன்றைய தினம் கவனித்துக் கொள்ள வேறொருவரை ஏற்பாடு செய்ய முயற்சிக்கவும்.

## ஆதரவு

- முடிந்தால், துணைக்கு ஒருவரை நீதிமன்றத்திற்கு அழைத்துச் செல்லுங்கள். இது ஒரு நண்பர் அல்லது குடும்ப உறுப்பினராக இருக்கலாம். அது சாத்தியமில்லை என்றால் அல்லது நீதிமன்றம் மற்றும் அதன் செயல்முறைகளை நன்கு அறிந்த ஒருவரிடமிருந்து கூடுதல் ஆதரவை நீங்கள் பெற விரும்பினால், 1800 571 239 எனும் எண்ணை அழைத்து Court Network இல் ஆதரவைப் பெறப் பதிவு செய்யலாம்.
- நீதிமன்றத்துக்கு வருகைதர உங்களுக்கு வேறு உதவி தேவைப்பட்டால், நீதிமன்றத்திலோ அல்லது Court Network இடமோ என்ன உதவி கிடைக்கும் என்று கேட்கலாம்.

## என்ன அணியவேண்டும், எதைக் கொண்டுவர வேண்டும்

- இவற்றை அணியுங்கள்: நேர்த்தியான, சுத்தமான ஆடைகள்.
- இவற்றைக் கொண்டுவாருங்கள்: தின்பண்டங்கள் மற்றும் குடிநீர், முழுமையாக சார்ஜ் செய்யப்பட்ட சாதனங்கள் மற்றும் உங்கள் வழக்கு/விடயம் தொடர்பான ஆவணங்கள்.

# நீதிமன்றம்

## நீங்கள் வந்து சேரும்போது

- நீதிமன்றத்திற்கு வந்ததும், பதிவாளர் முகப்புக்குச் செல்லவும்.
- உங்களுக்கு நீதிமன்ற விசாரணை இருப்பதாக பதிவு ஊழியர்களிடம் சொல்லுங்கள். உங்கள் நீதிமன்ற ஆவணங்களை அவர்களிடம் காட்டுங்கள்.
- நீதிமன்றம் உங்களுக்கு மொழிபெயர்ப்பாளர் ஒருவரைப் பதிவு செய்திருந்தால், அவர்கள் எப்போது வருவார்கள் என்று ஊழியர்களிடம் கேளுங்கள். எந்த மொழிபெயர்ப்பாளரும் முன்பதிவு செய்யப்படவில்லை, ஆனால் உங்களுக்கு மொழிபெயர்ப்பாளர் ஒருவர் தேவைப்பட்டால், ஒரு மொழிபெயர்ப்பாளர் கிடைப்பாரா என்று ஊழியர்களிடம் கேளுங்கள்.
- நீங்கள் சட்ட ஆலோசனையைப் பெறாமல் (வழக்கறிஞர் அல்லது காவல்துறையால்) பிரதிநிதித்துவம் செய்யப்படவில்லை என்றால், நீங்கள் கடமையில் உள்ள வழக்கறிஞரிடம் பேச விரும்பினால் பதிவக ஊளியர்களிடம் கூறுங்கள்.
- உங்களுக்கு பாதுகாப்புக் கவலைகள் இருந்தால், பதிவக ஊளியர்களிடம் தெரிவிக்கவும்.

## உங்கள் வழக்குக்காக காத்திருத்தல்


- உங்கள் வழக்கு விசாரணைக்காக நீங்கள் காத்திருக்கும்போது நீங்கள் உட்காரக் காத்திருப்புப் பகுதி உள்ளது. நீங்கள் சில மணிநேரம் காத்திருக்க வேண்டியிருக்கலாம் என்பதால் தயவுசெய்து பொறுமையாக இருங்கள்.
- ஏதேனும் காரணத்திற்காக நீங்கள் நீதிமன்றத்தை விட்டு வெளியேற வேண்டியிருந்தால், உங்கள் வழக்கைத் தவறவிடாமல் பார்த்துக்கொள்ள பதிவகத்திடம் கூறவும்.
- மொழிபெயர்ப்பாளர் பதிவு செய்யப்பட்டிருந்தால், உங்கள் மொழிபெயர்ப்பாளர் வரும்வரை உங்கள் வழக்கு நடக்கக்கூடாது.
- உங்கள் வழக்கு தயாரானதும், நீங்கள் நீதிமன்ற அறைக்குள் வருமாறு அழைக்கப்படுவீர்கள்.

## நீதிமன்ற அறை

- உங்கள் வழக்கு தயாரானதும், நீங்கள் நீதிமன்ற அறைக்குள் வருமாறு அழைக்கப்படுவீர்கள்.
- உங்கள் அலைபேசி அழைப்பொலியை அணைத்து வையுங்கள்.
- உள்ளே நுழையும்போதும் வெளியேறும்போதும் நீதிபதியை நோக்கிச் சிரம் தாழ்த்துங்கள்
- உங்கள் வழக்கில் என்ன நடக்கிறது என்பது பற்றி நீதிபதி உங்களிடம், உங்கள் வழக்கறிஞர் அல்லது காவல்துறையிடம் சில கேள்விகளைக் கேட்கலாம்.
- பதிலளிப்பவர் மற்றும்/அல்லது அவர்களின் வழக்கறிஞர் கூறுவதையும் நீதிபதி கேட்கலாம்.
- அவர்கள் வழக்குத் தகவலைக் கேட்ட பிறகு, என்ன செய்வது என்று நீதிபதி அவர்கள் முடிவு செய்வார்கள். நீங்கள் மீண்டும் நீதிமன்றத்திற்கு வர வேண்டியிருக்கலாம் அல்லது உங்கள் வழக்கு அதே நாளிலேயே நிறைவு செய்யப்படலாம். பதிலளிப்பவர் மீது தலையீட்டு உத்தரவொன்று இடப்படலாம்.
- என்ன நடக்கிறது என்பது உங்களுக்குத் தெரியாவிட்டால், நீதிபதி அவர்களிடம் அல்லது காவல்துறையினரிடம் கேள்விகளைக் கேட்பதில் தவறில்லை. நீதிபதி அவர்களைக் "கனம் நீதிபதி அவர்களே" என்று அழையுங்கள்.

## நீதிமன்றத்திற்குப் பிறகு

- நீதிபதி உங்கள் வழக்கை முடித்த பிறகு, ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளும்படி அல்லது கையெழுத்திடும்படி நீங்கள் கேட்கப்படலாம். நீதிமன்றத்தை விட்டு வெளியேறுவதற்கு முன் பதிவக மேசைக்குச் சென்று, நீங்கள் ஏதாவது செய்ய வேண்டுமா என்று பார்க்கவும்.
- முடிவைப் பற்றி உங்களுக்கு கவலைகள் இருந்தால், சட்ட ஆலோசனையைப் பெறவும் அல்லது பதிவகத்துடன் பேசவும்.
- நீங்கள் உங்கள் உத்தரவை மாற்ற அல்லது நீட்டிக்க விரும்பினால், எவ்வாறு செய்வது என்பதைக் காண இங்கே பார்க்கவும் www.mcv.vic.gov.au/family-matters/family-violence-intervention-orders-fvio


நடுவர்
நீதிமன்ற
எழுதுவினைஞர்
காவல்துறை/
விண்ணப்பதாரர்
பதிலளிப்பவர்
(பிரதிவாதி)/
வழக்கறிஞர்
சாட்சிப்
பெட்டி
பாதுகாக்கப்பட்ட
நபர்
பொதுமக்கள்
அமர்விடம்

Victorian Legal Services
**BOARD + COMMISSIONER**
Funded through the Legal Services Board Grants Program

Court Network (கோர்ட் நெட்வேர்க்)
1800 571 239
www.courtnetwork.com.au
admin@courtnetwork.com.au
Lvl 5, 555 Lonsdale Street,
Melbourne, Vic, 3000

இது நீதிமன்றத்தில் உங்கள் நாளுக்கான பொதுவான வழிகாட்டி. நீதிமன்ற நடைமுறைகள் மாறும்போது தகவல்களும் மாறுதலுக்கு உட்பட்டது.

பிற மொழிகளில் உட்பட இணையவழி வளங்களுக்கான அணுகலுக்கு

Court Network இற்குப் பரிந்துரை செய்ய